## காகித ஆலைக்கு நிலம் தந்த வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கிட வேண்டும்!

# க.பரமத்தி அஞ்சூர் பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைத்திடுவீர்!

## சட்டப்பேரவையில் – அரவக்குறிச்சி இரா. இளங்கோ கோரிக்கை!

**சென்னை, மே. 5 - சட்டப்பேரவையில் தொழில் துறை தகவல் தொழிற் நுட்பத் துறை மானியக் கோரிக்கையில் அரவக்குறிச்சி தொகுதி உறுப்பினர் இரா. இளங்கோ பேசுகையில், க.பரமத்தி அஞ்சூர் பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைத்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.**

சட்டப்பேரவையில் தொழில்துறை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை மானியக் கோரிக்கையில் அரவக்குறிச்சி தொகுதி உறுப்பினர் இரா. இளங்கோ பேசியதாவது:-

பகுத்தறிவு பகலவன் தந்தைப் பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாட்டின் நவீன சிற்பி தமிழ் மொழியை செம்மொழியாக அறிவித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திசை நோக்கி வணங்குகிறேன்.

எல்லோர்க்கும் எல்லாம் என்ற நோக்கோடு மகளிருக்கு விடியல் பயணம், குடும்பத் தலைவிக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், உலகம் போற்றும் காலை சிற்றுண்டி திட்டம், நான் முதல்வன் திட்டம், கலைஞர் நூலகம், அறிவுசார் மையம், கலைஞரின் கனவு இல்லம், தோழி விடுதிகள், அன்புச் சோலைகள், மூன்றாம் பாலினத்தவர்களுக்கு ஊர்க்காவல் படையில் பணி, இரண்டு இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தந்தை எவ்வழியோ, தமையனும் அவ்வழியே என்னும் சொல்லுக்கேற்ப துணை முதலமைச்சராக பொறுப்பேற்று, அனைத்து மாவட்டங்களுக்கும் நேரடியாக கள ஆய்வு செய்து, எல்லோருக்கும் எல்லாம் கிடைத்திட வேண்டுமென்று நோக்கில் நலத்திட்டங்களை வழங்கி, மக்கள் போற்றும் எங்கள் துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மின்சாரத் துறையை மிளிரும் துறையாக மாற்றிய எங்கள் மாவட்ட கழகத்தினுடைய செயலாளர், அரவக்குறிச்சி தொகுதிக்கு எண்ணற்ற திட்டங்களைப் பெற்று தந்த மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவை முன்னவர் அவர்களுக்கும், துணை சபாநயாகர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பேரவைச் செயலாளர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1989 ஆம் ஆண்டு இந்த மதிப்புக்க பேரவையில் சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றிய என் தந்தை மறைந்த மொஞ்சனூர் பி. இராமசாமி அவர்களையும் வணங்குகிறேன். தொழிற்துறை மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த மானியக் கோரிக்கை விவாதத்தின்மீது பேச வாய்ப்பளித்த அரசு கொறடா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மதிப்புமிக்க சபையில் எனக்கு உரையாற்ற வாய்ப்பளித்த என்னுடைய பாசமிகு அரவக்குறிச்சி தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும், பொது மக்களுக்கும், கழகத்தினுடைய ஒன்றிய நகர பேரூர் கழகத்தினுடைய செயலாளருக்கும், கழகத்தினுடைய நிர்வாகி களுக்கும், கூட்டணி கட்சியினுடைய தலைவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### தொழில் வளர்ச்சியில் முதல் மாநிலம்!

இந்தியாவில் தொழில் வளர்ச்சியில் முதலாவதாக மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அமையும்போதெல்லாம் தமிழ்நாட்டின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, பல்வேறு திட்டங்கள் தீட்டப்படுகின்றன. தொழில் துறை அபார வளர்ச்சி அடைந்துள்ளது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் தொழில் துறைக்கு 2030-ல் ஒரு ட்ரில்லியன் டாலர் என்கிற இலக்கை அடைய வேண்டுமென்ற நோக்கில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்தியாவை பொறுத்தமட்டில், 15 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. சுமார் 39,000 தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன.

உற்பத்தி திறனில் அதிகளவில் தொழிற்சாலைகள் உள்ளதால், அதிக அளவில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்றன. ஒரு புள்ளிவிவரத்தை உங்களிடம் குறிப்பிட கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தியாவிலே 41 சதவீதம் பெண்கள் நம்முடைய தமிழ்நாட்டு பெண்கள் பணிபுரிகிறார்கள் என்பதை ஒரு ஆய்வறிக்கை சொல்கிறது. இதுதான் திராவிடமாடல் அரசினுடைய சாதனை.

சமூக நலன், கல்வி, மருத்துவம், சாலை வசதி போன்ற உள் கட்டமைப்புகளை நம்முடைய திராவிட மடல் அரசு உருவாக்கியுள்ளது. இதன்மூலம் தொழில் துறையில் அதிக முதலீடுகளை ஈர்க்கப்படுகின்றன. தொழில்மயமாக்கலில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக பல ஆண்டுகளாக திகழ்ந்து வருகிறது. குறிப்பாக, பொறியியல், மோட்டார் வாகனம், உதிரி பாகங்கள், ஜவுளி, தோல், சர்க்கரை போன்ற உற்பத்தித் துறைகளில் தமிழ்நாடு முன்னிலையில் திகழ்ந்து வருகிறது.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் சிப்காட் 1971 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் மாநிலம் முழுவதும் ஒரே சீரான வளர்ச்சியை கருத்தில் கொண்டு, இன்றைக்கு சிப்காட்டை அனைத்து மாவட்டத்திங்களிலும் உருவாக்கி, தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தி, வேலை வாய்ப்பு வழங்கி வருகிறார்கள். இதன் காரணமாக, தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் இந்திய அளவில் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. குறிப்பாக நம்முடைய தமிழ்நாடு 9.47% பங்களிப்பு அளித்துள்ளது என்பதை இந்த வேளையில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

1997-ல் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் உலகில் மிகச்சிறந்த நிலையில் தமிழர்கள் இருக்க வேண்டும் என்ற நோக்கில் சென்னையில் ஒரு டைடல் பார்க்கை உருவாக்கினார். பின்னர் ஓசூர், கோயம்புத்தூர், மதுரை போன்ற பகுதிகளில் தகவல் தொழில் நுட்ப பூங்காக்கள் உருவாக்கப்பட்டு, இதனால் இன்றைக்கு தமிழகத்தில் எண்ணற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது. இதன்மூலம் முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் அந்த டைடல் பார்க்கை உருவாக்கித் தந்து, இளைஞர்களுக்கு அந்தந்தப் பகுதியில் வேலைவாய்ப்பு பெறுவதற்கு வழிவகுத்துத் தந்தார்கள்.

அதுமட்டுமல்ல; இன்று இளைஞர்களுக்கு உயர் கல்வியில் ஊக்கமளிக்க வேண்டுமென்ற காரணத்தினால் *Artificial Intelligence, Cyber Security, Advanced Manufacturing Technology*, இயந்திரவியல் போன்ற பல்வேறு பாடத்திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டு, இளைஞர்களின் தொழில் திறமைகளை உயர்த்த உள்ளது நம்முடைய திராவிட மாடல் அரசு முன்வந் துள்ளது என்பதை இந்த வேளையில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, இளைஞர்களின் திறமைக்கு மற்றொரு மைல் கல்லாக விண்வெளி தொழில் கொள்கைக்கு ஒப்புதல் அளித்த தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுக்கு இந்த வேளையிலே நன்றியைக் கூறிக் கொண்டு, இதன்மூலம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ 10,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் திட்டம் தீட்டிட யுள்ளது வரவேற்கத்தக்கது. இந்தியாவிலேயே மிகப் பெரிய பொருளாதார மாநிலமாக தமிழகம் உள்ளது.



### 896 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

உலக முதலீட்டாளர் மாநாட்டின் வெற்றியை தொடர்ந்து, வெளிநாட்டினரின் தொழில் முதலீடுகளைக் கவரும் நோக்கில் கோவை, மதுரை, திருச்சி மற்றும் தூத்துகுடி விமான நிலையங்களை விரிவாக்கம் செய்யப்பட்டது. பின்னர் இன்றைக்கு சென்னை, ஓசூர், மற்றும் ராமேஸ்வரத்தில் புதிய விமான நிலையம் அமைப்போம் என்ற முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு முதலீடுகளை ஈர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை இந்த வேளையில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற ஆண்டு 896 புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமானது. அந்த ஒப்பந்தத்தில் பார்த்தீர்களானால், என்னுடைய அரவக்குறிச்சி தொகுதியில் இரண்டு நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து பெற்று, இன்றைக்கு அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை பெருமையோடுக் கூறிக்கொள்கிறேன். தேசிய ஏற்றுமதியில் 33 சதவிகித பங்களிப்பு என்பது, இந்தியாவின் மிகப் பெரிய மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி கொண்ட மாநிலமாகத் திகழ்கிறது. எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள்.

2020-2021 ஆம் ஆண்டு 1.6 பில்லின் டாலராக இருந்த மின்னணு ஏற்றுமதி,

இன்றைக்கு, 2024-2025 ஆம் ஆண்டில் 12.62 பில்லியன் டாலராக அதிக வளர்ச்சிப் பெற்றிருக்கிறது என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, தமிழ்நாடு வளர்ச்சித் திட்டம் ஒரு கட்டமாக, *Tamil Nadu semi conductor* இயக்கம் என்ற ஐந்தாண்டுக்கால திட்டம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அது 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அறிவித்தது மிகவும் வரவேற்கத்தக்கது.

### மூன்றாவது பெரிய காகித ஆலை

தொழில் துறையைப் பொறுத்தமட்டில், என்னுடைய அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில், TNPL காகித ஆலை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இது இந்தியாவிலேயே மூன்றாவது பெரிய ஆலையாகும். இந்த ஆலையில், 2020--2021 ஆம் ஆண்டின் வருவாய் என்பது 2 ஆயிரத்து 819 கோடி ரூபாயாகும். ஆனால், இன்றைக்கு நம்முடைய திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பிறகு, 2023--2024 ஆம் ஆண்டின் வருவாய் என்பது 4 ஆயிரத்து 762 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்கள் அந்த ஆலைக்கு வருகை புரிந்தார்கள். வருகை புரிந்து, அங்கிருக்கிற தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் கேட்டறிந்தார்கள். அப்படிக் கேட்டறிந்த பின்னர்,

30 ஆண்டுக்கால கோரிக்கையை, 588 ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்த அரசு நம்முடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், இதுவரைக்கும் இல்லாத அளவிற்கு 30 சதவிகிதம் சம்பள உயர்வை உயர்த்தித் தந்த அரசு நம்முடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு மாவட்ட அமைச்சர்

வி. செந்தில்பாலாஜி அவர்களுடைய முயற்சி மிகவும் முக்கியமானது என்பதை நான் இந்த வேளையிலே தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இன்றைக்கு அந்த ஆலையின் மூலமாக இதுவரைக்கும், இந்த நான்காண்டு காலத்தில் 8 கோடி ரூபாய் செலவில், CSR நிதியைப் பெற்று அந்தப் பகுதியினுடைய அடிப்படைத் தேவைகளுக்கு நாம் பயன்படுத்தியிருக்கிறோம் என்பதை நான் இந்த வேளையிலே கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தமட்டில், நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், குறிப்பாக, கரூர் மாவட்டம் ஒரு சிறிய மாவட்டமாக இருந்தாலும், இன்றைக்கு SIPCOT பெற்றுத் தந்திருக்கிறார்கள். அதேபோல, புதிய டைடல் பார்க், முருங்கை பார்க், 8 மினி டெக்ஸ்டைல்ஸ் பார்க் ஆகியவற்றை மூன்று நிறுவனங்கள் தொடங்கி விட்டார்கள். அந்தளவுக்கு தொழில் வளர்ச்சியில் கரூர் மாவட்டம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலும், கரூர் மாவட்டத்தினுடைய வர்த்தகம் என்பது 25 ஆயிரம் கோடி ரூபாய். மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் முன்னெடுப்பின் காரணமாக, 75-க்கும் மேற்பட்ட தொழில் நிறு வனங்களையெல்லாம் ஒருங்கிணைத்து, இன்றைக்கு ‘Vision 2030’ என்ற ஒரு கொள்கையில், இந்த ஐந்தாண்டுக் காலத்தில் 50 ஆயிரம் வர்த்தகத்தை உயர்த்த வேண்டுமென்ற நோக்கில், அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அந்த வகையிலே, மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த வேளையிலே நான் நன்றியைக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எல்லார்க்கும் எல்லாம் கிடைத்திட வேண்டுமென்ற நோக்கில், அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று 2021 ஆம் ஆண்டு நான் இந்த அவையிலே முன்வைத்தேன். தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு, இந்த அரவக்குறிச்சி தொகுதிக்கு பல்வேறு திட்டங்களை வழங்கியிருக்கிறார்கள். அவற்றில் சிலவற்றை நான் உங்களிடத்திலே கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

### ரூ.2.48 கோடி ரூபாயில் வகுப்பறைக் கட்டடம்!

‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ என்ற திட்டத்தின்மூலம் 10 பணிகள் எடுக்கப்பட்டதில், இன்றைக்கு 6 பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன என்பதை நான் இங்கே பெருமையோடு கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். தோட்டக்குறிச்சி உயர்நிலைப் பள்ளியில் 2.48 கோடி ரூபாய் செலவில் வகுப்பறைக் கட்டடம்.

மின்சாரத் துறையைப் பொறுத்தமட்டில், 5 துணை மின் நிலையங்கள். அதில், ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள நான்கு துணை மின் நிலையங்களின் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை இந்த வேளையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்தமட்டில், எங்களுடைய பகுதி வறட்சியான பகுதி என்று நான் கோரிக்கை வைத்தபோது, இன்றைக்கு இரண்டு தடுப்பணைகளை நம்முடைய அரசு எனக்கு வழங்கியிருக்கிறது. அதுமட்டுமல்ல, பாசன வாய்க்கால். குடகனாற்றினுடைய பாசன வாய்க்கால் 64 கோடி ரூபாய் செலவிலே மேம்படுத்தப்பட்டிருக்கிறது.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தமட்டில், கோயம்புத்தூர்-கரூர் சாலை மற்றும் கரூரிலிருந்து ஈரோடு செல்கிற சாலை ஆகிய இரண்டு சாலைகளும் முக்கியமான சாலைகளாகும். இந்த இரண்டு சாலைகளும் நான்குவழிச் சாலைகளாக மாற்றியதன் காரணமாகவும், மின்சாரத் துறையின் மூலமாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் காரணமாகவும் இன்றைக்கு தொழில் நிறுவனங்களெல்லாம் என்னுடைய தொகுதியைத் தேடி வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது மாதிரி நம்முடைய திராவிட மாடல் அரசில் அனைத்து துறைகளிலும் நாம் வளர்ச்சிப் பெற்றிருக்கிறோம். என்னுடைய தொகுதி அனைத்து துறைகளிலும் நிதிகளைப் பெற்று, இன்றைக்கு வளமான தொகுதியாக மாறியிருக்கிறது என்பதை இந்த வேளையிலே கூறிக்கொள்கிறேன்.

இத்தனைத் திட்டங்களையும் வழங்கிய, முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு முக்கியமான கோரிக்கை. காகித ஆலைக்கு நிலம் வழங்கிய, 21 வாரிசுதாரர்களுக்கு 30 ஆண்டு காலமாக அவர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். ‌பேோ இத்தனையும் செய்தீர்கள் நீங்கள் அந்த 21 நபர்களுக்கும், வேலை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்தனைத் திட்டத்தையும் பெற்றுத் தந்த எங்களுடைய மாவட்ட அமைச்சர், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அண்ணன் திரு. V. செந்தில் பாலாஜி அவர்களுக்கும், அதேபோல எனக்கு உறுதுணையாக இருந்த அனைத்து கழகத்தினுடைய நிர்வாகிகளுக்கும் நன்றியைக்கூறிக்கொண்டு, தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என்று கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) வருகின்ற 2016-ல் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் வெல்வோம் 200, படைப்போம் வரலாறு என்று கூறி விடைபெறுகிறேன். (மணியடிக்கப் பெற்றது)

### தொகுதிக் கோரிக்கைகள்:

அரவக்குறிச்சி தொகுதியில் ஆத்துப்பாளையம் நீர்த்தேக்கம் பராமரிப்பு மற்றும் அமராவதி ஆற்றில் தடுப்பணை நங்காஞ்சி ஆற்றின் பாசன கால்வாய் சீரமைப்பு அமராவதி ஆற்றின் உபரநீரை தாதம் பாளையம் ஏரிக்கு கொண்டு செல்லும் திட்டம் மற்றும் காவிரி ஆற்றில் இருந்து பரமத்தி மட்டும் அரவக்குறிச்சி பகுதிகளுக்கு பாசனத்திற்கு நீர் ஏற்று பாசன சங்கம் அமைக்க வேண்டும்.

அரவக்குறிச்சி தொகுதி, தோட்டகுறிட்சி பேரூராட்சியில் பழுதடைந்த சாலைகள் மற்றும் கழிவுநீர் கால்வாய்களை சீரமைக்க நிதி ஒதுக்கித் தர வேண்டும்.

நொய்யல் ஆற்றின் மேல் உயர்மட்டப் பாலம்!

அரவக்குறிச்சி தொகுதி, கரூர் ஈரோடு நெடுஞ்சாலையில் உள்ள நொய்யல் பகுதியில் நொய்யல் ஆற்றின் மேல் உயர்மட்ட பாலம் அமைக்கப்பட வேண்டும். நொய்யல் வேலாயுதம்பாளையம் சாலையில் உள்ள ரயில்வே கிராசிங்க்கு உயர்மட்ட பாலம் அமைக்கப்பட வேண்டும். மற்றும் டிஎன்பிஎல் புன்னம் சாலையில் உள்ள ரயில்வே கிராசிங்க்கு ஒரு உயர்மட்ட பாலம் அமைக்கப்பட வேண்டும்.

அரவக்குறிச்சி தொகுதி, ஈசநத்தம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டித்தர வேண்டும்.

அரவக்குறிச்சி தொகுதி, புகலூர் நகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்ள நூலகத்தை தரம் உயர்த்தி முழு நேர நூலகமாக மாற்றித் தர வேண்டும். மொஞ்சனூர் தொட்டம்பட்டியில் புதிய பகுதிநேர நூலகம் அமைக்க ஆவன செய்ய வேண்டும். கார்வழி அரசு உயர்நிலை பள்ளியை மேல்நிலை பள்ளியாக தரம் உயர்த்தி தர வேண்டும்.

ஊரக வளர்ச்சி துறை முதல்வரின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் மூலம் 200 கிலோமீட்டர் சாலைகள் புதுப்பிக்கப்பட வேண்டும்.

அரவக்குறிச்சி தொகுதி, க.பரமத்தி ஒன்றியம் அஞ்சூர் பகுதி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சேமிப்பு குடோன் அமைக்க ஆவன செய்ய வேண்டும்.

புகலூர் நகராட்சி பகுதியில் ஒரு முதல்வர் மருந்தகம் திறக்க அவன செய்ய வேண்டும்.

குப்பம், கூடலூர் கிழக்கு, மலைகோவிலூர் பகுதியில் கிராம அறிவு மையம் அமைக்க வேண்டும்.

கரூர் to கோவை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள பரமத்தி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகளுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்படவேண்டும். தென்னிலை பகுதியில் ஒரு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும்.

பரமத்தி கால்நடை மருந்தக கட்டடம் பழுதடைந்துள்ளதால் புதிய கட்டடம் கட்டித்தர வேண்டும். மொஞ்சனூர் தொட்டம்பட்டி அத்திபாளையம் ஊராட்சி வலையபாளையம் பகுதிக்கு புதிய கிளை கால்நடை மருத்துவமனை அமைக்க அவன செய்ய வேண்டும்.

கரூர் முதல் தொட்டம்பட்டி, நட்டாராயண் கோவில் வழியாக திருப்பூர் வரையும் புன்னம் மேல்நிலை பள்ளி, தும்பிவாடி மேல்நிலைப்பள்ளி, ஏலவனூர் மேல்நிலை பள்ளி, ஈசனத்தம் மேல்நிலைப் பள்ளி, கோவிலூர் மேல்நிலை பள்ளி, இனங்கனூர் உயர்நிலைபள்ளி, ஆண்டிப்பட்டி மேல்நிலைப்பள்ளி, போன்ற பள்ளிகளுக்கு காலை மாலை நேரங்களில் பேருந்து சேவை ஏற்படுத்தி தர வேண்டும்.

க.பரமத்தியை தலைமை இடமாக கொண்டு தாலுக்கா உருவாக்க ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறு இரா. இளங்கோ பேசினார்.

---

## தி.மு.க. அயலக அணி

## சவுதிஅரேபியா-மேற்கு (தம்மாம்), சவுதிஅரேபியா-மத்திய (ரியாத்), சவுதிஅரேபியா-கிழக்கு (ஜெத்தா), சிங்கப்பூர், மலேசியா, பஹ்ரைன், கத்தார், யுனைடெட் கிங்டம் (UK), ஓமன், ஹாங்காங், உஸ்பெகிஸ்தான், ஜெர்மனி, கென்யா, தாய்லாந்து, டான்சானியா ஆகிய அயல்நாடுகளின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா, எம்.பி., அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி **சவுதிஅரேபியா– மேற்கு (தம்மாம்), சவுதிஅரேபியா– மத்திய (ரியாத்), சவுதிஅரேபியா– கிழக்கு (ஜெத்தா), சிங்கப்பூர், மலேசியா, பஹ்ரைன், கத்தார், யுனைடெட் கிங்டம் (UK), ஓமன், ஹாங்காங், உஸ்பெகிஸ்தான், ஜெர்மனி, கென்யா, தாய்லாந்து, டான்சானியா** ஆகிய அயல்நாடுகளின் தி.மு.க. அயலக அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சவுதிஅரேபியா – மேற்கு (தம்மாம்)**

அமைப்பாளர் - எஸ்.கே.எஸ்.சிக்கந்தர்பாபு தம்மாம்.

துணை அமைப்பாளர்கள் - 1.குண்டுபிலால், 2.அப்துல்சமது, 3. முகமதுஜியாஉல்ஹக்

**சவுதிஅரேபியா – மத்திய (ரியாத்)**

அமைப்பாளர் - டாக்டர் சந்தோஷ் பெமிவின்பிரட் ரியாத். ரியாத்

துணை அமைப்பாளர்கள் - 1,வாசிம்ராஜா, 2.அப்துல் ரஹ்மான்

**சவுதிஅரேபியா – கிழக்கு (ஜெத்தா)**

அமைப்பாளர் - S.எழில்மாறன் ஜெத்தா

துணை அமைப்பாளர்கள் - 1.ராஜாமுகமது ஹாஜாமைதீன், 2.R.Sஜாகீர்உசேன், 3.முகமதுஇஸ்மாயில் (அபுஇன்பன்), 4.Er V.K.M.M காஜாமைதீன், 5.டாக்டர்நூகு அப்துல்ஹ்கான்

**சிங்கப்பூர்**

அமைப்பாளர் - க.நரசிம்மன் நரேஷ் சிங்கப்பூர்

துணை அமைப்பாளர்கள் - 1.செல்வபூபதி, 2.MJA அஜ்மீர் அலி, 3.AKB ஆரிஃப், 4.கோவை.கலைச்செல்வி, 5.கார்த்திக் ராமசாமி, 6.பி.சந்திரசேகர், 7.செந்தில்குமார்.

**மலேசியா**

அமைப்பாளர் - M.S.B.முகம்மதுபிர்தொளஸ்கான் மலேசியா

துணை அமைப்பாளர்கள் - 1.MK.முகம்மதுஜெய்லானி, 2.A.முஹம்மது இர்ஷாத்துல்லாஹ், 3.L.சார்லஸ் (எ) ஜோசப்அகஸ்டின், 4.ஜெயசீலன், 5.H.முகம்மதுரபிக்

**பஹ்ரைன்**

அமைப்பாளர் - முகம்மதுஹுசைன்மாலிம்

துணை அமைப்பாளர்கள் - 1.A. சுல்த்தான்இப்ராஹிம், 2.S. கருணாநிதி, 3.S. கபீர்அகமது, 4.எருச்சி A C ரவிச்சந்திரன், 5.மன்னை I. அப்துல்முபாரக், 6.N. திருமேனிநடராஜன், 7.K.வெம்புராஜ், 8.G.சதீஷ்குமார், 9.S.லலித்குமார், 10.சபீக்மீரான்

**கத்தார்**

அமைப்பாளர் - R.மதன்குமார் கத்தார்.

துணை அமைப்பாளர்கள் - 1.ப.அப்துல் ரசீத், 2.T.R.பாலாஜி, 3.V.மதன்குமார், 4.யாழினி' குமார், 5.கே. ராஜ்குமார், 6.கோபாலகிருஷ்ணன், 7.பூபதி பாலா, 8.GSR சத்யராஜ், 9.பரந்தாமன் சீனிவாசன்,10.அக்கீம்அபூபக்கர், 11.சுகுமார், 12.விவேக் யுனைடெட்

**கிங்டம் (UK)**

அமைப்பாளர் - அ. செந்தில்குமார் யுனைடெட் கிங்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1.பா.வேல்முருகன், 2.மி. சத்தியநாராயணன், 3.M.V.K.பாலன், 4.ஜெய்னுல்அபுதீன், 5.மௌலதின்நபிஷா, 6.கா.குமரவேல், 7.வினோத்வரதராஜன், 8.சுமித்ரன்செல்லப்பன்பூபதி

**ஓமன்**

அமைப்பாளர் - P. சிவக்குமார் ஓமன்

துணை அமைப்பாளர்கள் - 1.R பாலமுருகன், 2.சிவ.செந்தில், 3.Hஅயூப்கான், 4.P.பாக்யராஜ், 5.O.முகமதுபாரூக், 6.K திருமாவளவன், 7.எம்ஏபர்சாத்.

**ஹாங்காங்**

அமைப்பாளர் - அ விக்ரம் சதீஷ் ஹாங்காங்.

துணை அமைப்பாளர்கள் - 1.மு உ இம்ரான் என்ற இம்ரான் உசேன், 2.அ அகமது கபீர், 3.ரா சுந்தர் ராஜன், 4.முகமது சுலைமான் லெப்பே, 5.அ செயது இப்ராஹிம், 6.தே. ஜான் புஷ்பராஜ் 7.முனைவர் சிவகணேஷ்.

**உஸ்பெகிஸ்தான்**

அமைப்பாளர் - Dr.T.A.முகமது காதர் M.D உஸ்பெகிஸ்தான்.

துணை அமைப்பாளர்கள் - 1.D.சந்திரகாந்தன், 2.K.அசோக் காளிதாஸ், 3.B.முருகன்ரெங்கராஜன், 4.R.கிறிஸ்டோபர்

**ஜெர்மனி**

அமைப்பாளர் - மஹாவிர் பிரசாத் பிச்சைமணி ஜெர்மனி

துணை அமைப்பாளர்கள் - 1.ஏ.ஜோஸ்பின்ரம்யா, 2.மீனாட்சி கஜேந்திரன் இளந்தென்றல்

**கென்யா**

அமைப்பாளர் - கோபி தங்கவேலு அரங்கநாயகம் கென்யா.

துணை அமைப்பாளர் - புருஷோத்தமன் பாலகிருஷ்ணன்

**தாய்லாந்து**

அமைப்பாளர் - சரவணன் மாரியப்பன் தாய்லாந்து.

துணை அமைப்பாளர்கள் - 1. 1.எம்.முகமது தாஹா, 2.ரமேஷ்சுப்பிரமணியன், 3.முகமது பைசல் அஜ்மல் ஹுசைன்

**டான்சானியா**

அமைப்பாளர் - பா. புரூஸ்லீ ரூபன் டான்சானியா

துணை அமைப்பாளர்கள் - 1. சரண்குமார், 2.முகமதுசபீக்.

"அண்ணா அறிவாலயம்" சென்னை - 18
நாள்- 03-05-2025.

எம்.எம்.அப்துல்லா, எம்.பி.,
செயலாளர்,
தி.மு.க. அயலக அணி.